005

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (நாடகமும் அரங்கியலும் மற்றும் இயற்கை விஞ்ஞானம்) - 2023/2024

இறுதிப்பரீட்சை மட்டம் - 06

**SNU6212– உள்ளடங்கற் கல்வி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 20.12.2024 | நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி I

**1.** விசேட தேவைகள் சார் கல்வி என்ற எண்ணக்கருவை விளக்கிக் குறிப்பாக இலங்கைச் சூழலில் உள்ளடங்கற் கல்வியை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தினை ஆராய்க.

**2.** உள்ளடங்கல் வகுப்பறை ஒன்றில் செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்களுக்கு உதவப் பயன்படுத்தக்கூடிய கற்பித்தல் உபாயங்கள் **மூன்றினைப் (03)** பட்டியற்படுத்துக.

**3.** வினைத்திறனான உள்ளடங்கற் கல்விக்குத் தடையாக அமையும் பொதுவான **ஐந்து** (05) காரணிகளைப் பட்டியற்படுத்துக.

**4.** உள்ளடங்கல் வகுப்பறைகளில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களைக் குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றைத் (01)** தெரிவு செய்து அதனை எவ்வாறு வினைத்திறனாக விலாசப்படுத்த முடியும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**5.** கல்வி முறைமையில் ஒருங்கிணைந்த கல்விக்கும் உள்ளடங்கற் கல்விக்கும் இடையேயான **இரண்டு (02)** பிரதான வேறுபாடுகளைக் குறிப்பிட்டு அவற்றைப் பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

**6.** இயலாமையுடைய பிள்ளைகளின் தேவைகளை விலாசப்படுத்தலில் தனியாள்மையக் கல்வித் திட்டத்தின் முக்கியத்துவங்கள் **மூன்றினைப் (03)** பட்டியலிடுக.

**7.** ஓர் உள்ளடங்கல் வகுப்பறையின் ஆசிரியராக, எழுத்துச் செயன்முறையில் இடர்படும் பிள்ளைகளை எவ்வாறு இனங்காண்பீர்? நீங்கள் மேற்கொள்ளக்கூடிய முன்னெடுப்புக்களின் படிகளை விளக்குக.

**8.** அறிவு சார் இயலாமை மற்றும் உடல் சார் இயலாமை ஆகியனவற்றிற்கிடையே உள்ள பிரதான வேறுபாடுகளைச் சுருக்கமாக ஆராய்க.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

**9.** **அ.** ஓர் உள்ளடங்கல் வகுப்பறையில் டவுண் சின்ரோம் உடைய மாணவர்கள் முகங்கொடுக்கக்கூடிய கல்வி சார் சவால்கள் **மூன்றினைச் (03)** சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

ஆ. டவுண் சின்ரோமுடைய மாணவர்களுக்குச் சிறப்பாக உதவுவதற்கு ஆசிரியர்கள் கற்பித்தல் உபாயங்களை எவ்வாறு மாற்றியமைக்க முடியும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.
**(06 புள்ளிகள்)**

இ. டவுண் சின்ரோமிக்கும் மூளையச் சோர்விற்கும் இடையேயான பிரதான **இரண்டு (02)** வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக.
**(08 புள்ளிகள்)**

**10.** அ. ஓர் உள்ளடங்கல் வகுப்பறையில் அதீத செயலூக்கமும் அவதானக் குறைபாடும் உடைய மாணவர்களும் ஓட்சிசத் திருசிய ஒழுங்கீன நிலையுடைய மாணவர்களும் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் **மூன்றினைப் (03)** பெயரிடுக.
**(06 புள்ளிகள்)**

ஆ. ஒரு முன்சேவை ஆசிரியராக, நீங்கள் மேலே குறிப்பிட்ட சவால்களில் ஒன்றைத் தெரிவுசெய்து அதனை விலாசப்படுத்தி, அவற்றிற்கான தீர்வுகளைப் பரிந்துரைத்துச் சுருக்கமாக விபரிக்குக.
**(06 புள்ளிகள்)**

இ. நீங்கள் மேலே பரிந்துரைத்த தீர்வொன்றினைத் தெரிவுசெய்து அதன் அமுலாக்கத்தைத் தெளிவாக விளக்கி அதற்கான உங்கள் அணுகுமுறையை பொருத்தமான உதாரணங்களை முன்வைப்பதன் மூலம் விபரிக்குக.
**(08 புள்ளிகள்)**

**11.** அ. இலங்கையில் உள்ளடங்கற் கல்வி நடைமுறைகளை அமுல்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரதான சவால்கள் **மூன்றினைப் (03)** பெயரிடுக.
**(03 புள்ளிகள்)**

ஆ. பொருத்தமான **இரண்டு (02)** உதாரணங்களைப் பயன்படுத்தி உள்ளடங்கல் நடைமுறைகள் தொடர்பான போதிய அறிவும் பயிற்சியும் முன்சேவை ஆசிரியர்களுக்கு ஏன் அவசியம் என்பதை விபரிக்குக.
**(07 புள்ளிகள்)**

இ. இலங்கைக் கல்வி நடைமுறையில் உள்ளடங்கல் வகுப்பறைச் சூழலை மேம்படுத்த தழுவமைக்கக்கூடிய படைப்பாற்றல் மிக்க உபாயங்கள் **ஐந்தினைப் (05)** பரிந்துரை செய்க.
**(10 புள்ளிகள்)**

**12.** அ. 1980 இல் உலக சுகாதார அமைப்பின் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் "குறைபாடு" "இயலாமை" மற்றும் "ஊனப்படுத்தப்பட்ட நிலை" ஆகிய பதங்களுக்கிடையேயான வேறுபாடுகளை விளக்குக.
**(06 புள்ளிகள்)**

ஆ. மேலே குறிப்பிட்ட பதங்களுக்கிடையிலான வேறுபாடுகள் தொடர்பான முன்சேவை ஆசிரியர்களின் தெளிவும் அறிவும் பல்வகைமைத் தேவைகளையுடைய மாணவர்களுக்கான வலுவான உள்ளடங்கல் வகுப்பறையை உருவாக்குவதற்கு எவ்வாறு உதவும் என்பதை ஆராய்க.
**(06 புள்ளிகள்)**

இ. இலங்கைப் பாடசாலை வகுப்பறைகளில் குறைபாடுடைய மாணவன் ஒருவன் எதிர்கொள்ளும் தடைகள் தொடர்பாக பிரதிபலிப்பை முன்வைத்துக் குறித்த தடைகளின் வீரியத்தைக் குறைப்பதற்கான உபாயங்கள் **இரண்டினைப் (02)** பரிந்துரை செய்க.
**(08 புள்ளிகள்)**

13. அ. மீத்திறன் உள்ள மாணவர்களுக்கும் கற்றல் இயலாமையுள்ள மாணவர்களுக்கும் இடையேயான பிரதான வேறுபாடுகள் **மூன்றினைச் (03)** சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ஆ.** ஓர் உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக, மீத்திறன் உள்ள மாணவர்களுக்கும் கற்றல் இயலாமையுள்ள மாணவர்களுக்கும் அவர்களது தேவைகளை விலாசப்படுத்தி நீங்கள் பிரயோகம் செய்யக்கூடிய படைப்பாற்றல் மிக்க உபாயங்கள் **இரண்டினை (02)** விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**இ.** மேலே குறிப்பிட்ட குழுவினரின் கற்றல் அனுபவங்களை மேம்படுத்தக்கூடிய வகையில் பெற்றோர்களுடனும் வாண்மையாளர்களுடனும் கூட்டாகச் செயற்படக்கூடிய வழிகள் **மூன்றினை (03)** உதாரணத்தை முன்வைத்து ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

14. அ. உள்ளடங்கல் வகுப்பறை ஒன்றில் விழிப்புலக் குறைபாடுடைய மாணவர்கள் எதிர்கொள்ளும் பொதுவான சவால்கள் **மூன்றினைச் (03)** சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ஆ.** மேலே குறிப்பிட்ட சவால்கள் எவ்வாறு அவர்களின் கற்றல் செயன்முறையைப் பாதிக்கும் என்பதை குறைந்தது **இரண்டு (02)** உதாரணங்களை முன்வைத்துச் சுருக்கமாக ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**இ.** ஓர் உள்ளடங்கல் வகுப்பறையில் விழிப்புலக் குறைபாடுகளுடைய மாணவர்களுக்கான உதவியை மேம்படுத்த ஆசிரியர்கள் முன்னெடுக்கக்கூடிய கற்பித்தல் உபாயங்கள் அல்லது வகுப்பறை சார் தழுவல்கள் **ஐந்தினைப் (05)** பரிந்துரை செய்க.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -